Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

போன்: 389

மலர் 8

யாழ்ப்பாணம், சார்வரி மாசி 2-ஆம் நாள் ஷஃபான் 26. (13-2-61) திங்கட்கிழமை

தபால் பெட்டி எண்: 49

இதழ் 2




# லுமும்பா அடித்து கொல்லப்பட்டார்?

## 'இனி அவரது உடலையும் பார்க்க முடியாதாம்'

### கடாங்கா கூலிப் படை திரட்டுகிறது

காங்கோவில் இப்போது பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. லுமும்பா உயிருடன் இருந்தாலும் சரி, செத்திருந்தாலும் சரி அவர் தப்பிவிட்டதாகச் சொல்லப்படுவதிலிருந்து, இனி காங்கோவில் அதிக இரத்தக் களரியும் குழப்பங்களும் ஏற்படுமென்று அஞ்சப்படுகிறது.

திட்டமான செய்தி இதுவரை கிடைக்காவிடினும், லுமும்பா ஏற்கெனவே சிறையில் சுடப்பட்டோ அல்லது சாகும் வரை அடிக்கப்பட்டோ செத்திருக்க வேண்டுமென்றே லண்டனில் பொதுவாக கருத்து நிலவுகின்றது.

செஞ்சிலுவை சங்கத்தாரும் ஐ. நா. சமரச கமிஷனும் எவ்வளவோ முயற்சித்தும்கூட லுமும்பா எங்கே சிறைபடுத்தப்பட்டுள்ளாரென்பதையும் அறிய முடியவில்லை.

ஒரு டச்சுப் பத்திரிகையின் ஆசிரியர் ஷோம்பிக்கு டெலிபோன் மூலம் லுமும்பாவைப் பற்றி விசாரித்தபோது அதற்கு

(5-ம் பக்கம் பார்க்க)

## இரு ஜனாதிபதிகள் ஒரு பெண் பிரதமர்

### காமன்வெல்த் மாநாடு

அடுத்த மாதம் லண்டனில் நடைபெற விருக்கும் சாம்ராஜ்யப் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் இரண்டு ஜனாதிபதிகளும் உலகின் ஒரேயொரு பெண் பிரதமமந்திரியும் கலந்து கொள்வார்கள்.

பாகிஸ்தான் ஜனாதிபதி, பீல்ட் மார்ஷல் அயூப்கான் கானா ஜனாதிபதி டக்டர் நிக்ருமா, இலங்கைப் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயகா ஆகியோர்களே இவர்கள்.


## மொரோக்கோவில் பூகம்பம்

மொரோக்கோவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சில நிமிட நேரம் பூகம்பம் ஏற்பட்டது. என்றாலும் சேதம் எதுவுமில்லை. சமீபத்தில் அங்கு ஏற்பட்ட பூகம்பத்தில் பெருஞ் சேதம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நிருபர்கள் தேவை

'ஈழநாடு' தினசரிப் பத்திரிகைக்கு இலங்கை எங்கும் நிருபர்கள் தேவை. பத்திரிகைத் தொழிலில் அனுபவமும் பொறுப்புமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

ஆசிரியர்
'ஈழநாடு'
த. பெ. எண்: 49
யாழ்ப்பாணம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116/118 கெய்சர் வீதி, : : கொழும்பு.

# மத்திய குழு இவ்வாரம் கூடுகிறது

## செல்வநாயகத்திடம் 'சர்வாதிகாரம்'

யாழ்ப்பாணம்

தமிழரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கைத் திட்டத்தின்இரண்டாவது இயக்கமான 'மறியல்' அம்சம் இம்மாதம் 20-ந் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. இதற்குமுன்னர் இம்மாதம் 18, 19-ந் திகதிகளில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடி இறுதித் திட்டங்களை ஆராயும்.

நேரடி நடவடிக்கையை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தொண்டர்களைத் திரட்டும் நோக்கமாக பிரசாரக் கூட்டங்களை நடத்திவந்த தமிழரசுக்கட்சி இம்மாதம் 5-ந் திகதியுடன் பிரசாரக் கூட்டங்களை ரத்துச் செய்துவிட்டது. இவ்வாரம் பல இடங்களிலும் நடைபெறவிருந்த பொதுக் கூட்டங்களும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன.

சென்ற சனி ஞாயிற்றுக் கிழமைகளில் வவனியாவில் நடைபெறவிருந்த கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டதுடன் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேரடி நடவடிக்கை சம்பந்தமாக மட்டக்களப்புக்குச் செல்வதற்கு உத்தேசித்திருந்தார். ஆனால் அவரது உடல் நிலை காரணமாக மட்டக்களப்புப் பிரயாணத்தை ரத்துச் செய்துவிட்டார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## அளகேசன் – நேரு சந்திப்பு

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. இ. வி. அளகேசன் பிரதமமந்திரி நேருவை சென்ற வெள்ளிக்கிழமை சந்தித்தார். சென்னை ராஜ்யத்திலுள்ள அரசியல் நிலைமை பற்றி அவரிடம் விளக்கியதாகத் தெரியவருகிறது:

# வல்வெட்டித்துறை, மன்னாரில் விசேஷ பொலிஸ் காவல்

## கள்ளக் கடத்தலைத் தடுக்க தீவிர நடவடிக்கை

— 'ஈழநாடு' கொழும்பு நிருபர் —

வல்வெட்டித்துறை, மன்னார் இவ்விரு பகுதிகளிலும் வேறு இடங்களிலும் விசேஷ பொலிஸ் படைகளை நிறுத்திக் கள்ளக் கடத்தல்களைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிகிறது.

வெளிநாடுகளிலிருந்து இலங்கையில் இறக்குமதியாகும் கைக்கடிகாரங்கள், பேனைக்கள், டப்பாக்கள் முதலியவற்றில் பெரும் பாலும் இந்தியாவுக்குத் தோணிகளில் கடத்தப்படுவதாகவும், இதனால் இலங்கையின் செலாவணிக்கு நஷ்டம் ஏற்படுவதாகவும் இதைத் தடுக்க வேண்டுமென்றும் நிதிமந்திரி கருதுகிறார்.

இறக்குமதிக் கட்டுப்பாட்டை அதிகரித்து, செலாவணியை மிச்சப்படுத்த முயலுகையில், இப்பொருள்கள் வெளியேறாமல் தடுத்தாகவேண்டுமென்று பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விஷயம்பற்றி மந்திரி சபையின் அடுத்த கூட்டத்தில் ஆராய தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிகிறது.

# உபகாரச் சம்பளத்தில் சென்ருர்

கொழு்பு, பெப். 10

கல்வி இலாகாவைச் சேர்ந்த திரு. டி. ஜே. நாணயக்காரா, "ஆசியா பௌண்டேஷன்" உபகாரச் சம்பளத்திட்டத்தின்கீழ் பயிற்சிபெற அமெரிக்கா சென்றிருக்கிருர். கலிபோர்னியா சர்வகலாசாலையில் அவர் மனேதத்துவம்பற்றிக் கற்பார்.

---

## ரஷ்யாவில் இலங்கை பொம்மை காட்சி

கொழும்பு, பெப். 10

இலங்கை பொம்மலாட்டக் காட்சி ஒன்று ரஷ்யாவில் இவ்வாண்டு நடைபெறும். இலங்கை-ரஷ்யா கலாச்சார பரிவர்த்தனை உடன்பாட்டின் கீழ் இந்தக் காட்சி நடைபெறும்.

சோவியத் சினிமாப்பட விழா ஒன்றும், சோவியத் கலே, சிற்பக் கண் காட்சி ஒன்றும் இவ்வாண்டு இலங்கையில் நடைபெறவிருக்கிறது.

---

## பண்டாரவளை இந்துபரிபாலன சங்கம்

பண்டாரவளை

"விஞ்ஞான வர்த்தகப் படிப்புகளுக்காக இந்துப் பிள்ளைகள் தற்பொழுது பண்டாரவளை அரசினர் சிரேஷ்ட பாடசாலையில் படித்துவருகின்றனர். மேற்கொண்டும் இப் பாடசாலையில் சேர்ந்து படிக்க வசதியில்லாத காரணத்தால் வசதிகளை ஆக்கித்தருதல்" என்று பண்டாரவளை இந்து பரிபாலன சங்கத்தின் நிர்வாக சபை சமீபத்தில் கூடி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

---

## வானெலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**திங்கள், 13-2-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 7-30 திரைஇசை 8-00 வாத்திய இசை 8-15 இஸ்லாமிய கீதங்கள் பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 நீலா இராமசாமி—வீணை 5-45 திரை இசை * 6-15 கிராம சஞ்சிகை 6-45 வாத்தியக் கோஷ்டி இரவு 7-00 நேயர் விருப்பம் * 7-30 எஸ். ஆர். கனகசபை—பேச்சு 7-45 என். சண்முகரத்தினம்—பாட்டு 8-45 இஸ்லாமிய கீதங்கள் 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-45 உறுதுப்பாடல்கள் 10-00 மகாசிவராத்திரி—திருக்கேதீச்வர அஞ்சல்

* செங்கடகல உப நிலையத்தில் அஞ்சல்

### திருச்சி

(செய்திகள் காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 7-30 டி. கே. வல்லபை—பாட்டு பகல் 12-00 சென்னை அஞ்சல் 1-00 பழமார்நேரி எஸ் நடராஜன்—பாட்டு 1-30 வாத்திய இசை 2-10 டி. கே. வல்லபை—பாட்டு மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கிதம்) 5-45 இசைப்பயிற்சி 6-05 பிராந்தியச் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7-30 இம்மாதப்பாடல் 7-35 வள்ளுவர் சொல்லோவியம் 7-40 திரைப்பட இசை 8-00 சங்கீத உபன்யாசம் 9-15 பெரும் காப்பியங்கள்—பேச்சு

# மரவரித் திட்டத்தினல் கிடைத்த பணம்

## நிதி மந்திரியை மேயர் சந்தித்தார்

யாழ்ப்பாணம்

மரவரிக்கு 'லைசன்ஸ்' வழங்கியதன் மூலம் வசூலான பணத்தை மாநகரசபையின் நிதியில் சேர்ப்பது சம்பந்தமாக மாநகரசபைமேயர், ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர், ஸ்தலஸ்தாபன அமைச்சர், நிரந்தரக் காரியதரிசி ஆகியோருடன் சமீபத்தில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அறவிடப்படாமல் நிலுவையிலிருப்பதாகக் கருதப்படும் தொகையை வசூலிப்பதற்கு சென்ற காலத்தில் சபை சில நடவடிக்கைகள் எடுத்தது. இந்தப்பணம் பற்றியும், வரிப் பணத்தை இனிமேல் அறவிடுவது பற்றியும் இரண்டு அம்சமாக மேயர் ஸ்தலஸ்தாபன அமைச்சர், நிரந்தரக் காரிய தரிசி ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பணம் சம்பந்தமாக மாநகரசபையின் கோரிக்கைக்கு ஸ்தலஸ்தாபன அமைச்சரும் நிரந்தரக் காரியதரிசியும் ஆதரவு தெரிவித்தனராயினும் இது சம்பந்தமாக நிதிமந்திரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும்படி மேயரிடம் யோசனை கூறியுள்ளனர்.

மரவரி முறைத்திட்டத்தின் மூலம் வரவேண்டிய பணத்தை மாநகரசபை எடுத்துக்கொள்வது சம்பந்தமாக வழக்குத் தொடரவும் ஸ்தலஸ்தாபன அமைச்சர் மேயருக்கு யோசனை கூறினராம். ஆனல் நிதிமந்திரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே வழக்குத்தொடர்வதுபற்றி நடவடிக்கையெடுக்கும்படி மந்திரி தெரிவித்தாராம்.

# பிரதமர் சிறிமா ரஷ்யா செல்லமாட்டார்

கொழும்பு

பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்கா காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ள லண்டன் செல்லும்போது வேறு நாடுகளுக்கு விஜயம் செய்யமாட்டார் என்று இப்பொழுது தெரியவருகிறது.

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் ரஷ்யா போன்ற நாடுகளுக்கும் விஜயம் செய்துவிட்டுத் தாயகம் திரும்புவதாகப் பிரதமர் முதலில் முடிவு செய்திருந்தார். ஆனல் தற்பொழுது அந்த ஏற்பாட்டைப் பிரதமர் ஒத்திவைத்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

(7 ஆம் பக்கம் பார்க்க)


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

ஏனெனில்,

அது எனக்கு

எவ்வளவோ

நன்மையளிக்கின்றது..






நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட்பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப்பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, $B_2$, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B 1 சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

**நெஸில்ஸ்**

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப்பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ட்ஸ் (சிலோன்) லிமிட்டெட், த. பெ. 189 கொழும்பு.

ஒவ்வொருவரும் விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபாரநன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன இழந்த சக்தியை மீட்டுத் தரவும், ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பது தான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி அலாதியானது.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B1 அடங்கியது.

யாழ்ப்பாணத்தில்

# மாதிரிச் சந்தை அமைக்க கடன் உதவி

## ஸ்தல ஸ்தாபன மந்திரியிடம் மேயர் வற்புறுத்து

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் மாதிரி சந்தையொன்று நிர்மாணிக்கப்படுவது மிகவும் அவசியம் என்றும் ஆனல் போதிய நிதிவசதியின்மையால் சந்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமலிருக்கிறதென்றும், அதற்காக அரசாங்கம், கடனுதவியோ அல்லது மத்திய வங்கியில் நிதி பெறுவதற்கு உத்திரவாத மோ தந்துதவ வேண்டுமென்றும் யாழ்ப்பாணம் மேயர் திரு. டி. எஸ். துரைராஜா ஸ்தலஸ்தாபன மந்திரியிடம் வற்புறுத்தியிருக்கிறார்.

கடந்த மாதம் இறுதியில் ஸ்தலஸ்தாபன மந்திரி, ஸ்தலஸ்தாபன அமைச்சின் நிரந்தரக் கரியதரிசி ஸ்தலஸ்தாபன கமிஷனர் ஆகியவர்களுடன் முனிசிபல் சபைக் கமிஷனரும் தாமும் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து மேயர் விடுத்திருக்கும் ஒரு அறிக்கையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

முனிசிபல் சபையின் மின்சாரவினியோகத்தைத் திருத்தி அமைப்பது சம்பந்தமாகவும் தாம் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகவும், அதற்கான கடனுதவிகள் வழங்கவேண்டுமென்ற தமது கோரிக்கையை மந்திரி ஆதரித்ததாகவும் மேயர் குறிப்பிட்டிருக்கிறார்.

முனிசிபல் சபை வட்டார எல்லை நிர்ணயம், மரவரி, வரி அறவிடுதல், வாடி வீடு ஆகிய விஷயங்கள் உட்பட வேறு சில விஷயங்கள் சம்பந்தமாகவும் மேயர் ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்.

# 20,000 பஸ் ஊழியர்

## எந்நேரமும் வேலைநிறுத்தம் செய்வர்

கொழும்பு பிப். 10

இலங்கை போக்குவரத்து சேவையையச் சேர்ந்த சுமார் 20,000 ஊழியர்கள் எந்நேரத்திலும் வேலைநிறுத்தத்தில் இறங்கக்கூடுமென்றும், அவர்களது குறைபாடுகளை உயர்தர அதிகாரிகள் பரிகரிக்காமல் இருப்பது ஒருபுறமிருக்க நியாயமற்ற முறையில் அதிகாரிகள் நடந்துகொள்வதே இதற்குக் காரணம் என்றும் இ. போ. சபையைச் சேர்ந்த தொழிற் சக்கங்களின் கரியதரிசிகள் விடுத்துள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

இ. போ. ச. சேவைகள்பற்றி பொதுமக்களின் அதிருப்தி மட்டுமின்றி, ஊழியர்களும் அதன் நிர்வாகத்தில் குழப்பமடைந்திருப்பதாய் அந்த அறிக்கை கூறுகிறது. ஒழுங்கின் பெயரால், ஊழியர் பலர் நியாயமற்ற முறையில் வேலைநீக்கம் செய்யப்படுவதாயும் அறிக்கை கூறுகிறது.

## 50லட்சம் பேருக்கு நிலம்

புதுடில்லி

3வது ஐந்து வருடத் திட்டத்தில் நிலம்அற்ற 50 லட்சம் தொழிலாளர்களுக்கு நிலம் அளிப்பதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிலம்மட்டுமின்றி வீடுகட்டுவதற்கான இடமும் பொருத்தமான வேலை வசதிகளும் அளிக்கப்படுமாம். திட்டக்கமிஷன் இதுபற்றிய வேலையில் மும்முரமாய் இருக்கிறது.

## சிவராத்திரி விழா

பிப்ரவரி 13-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கும்பெனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமிகோவிலில், மஹாசிவராத்திரி விழா ஆரம்பமாகி 15-ந் திகதி வரை நடைபெறும். திரு. நா. மாணிக்க இடைக்காடர், விழாவை ஆரம்பித்துவைப்பார்.

## மன்னார் குடாவில் முத்துக்குளிப்பு

### மாதஇறுதியில் ஆரம்பம்

கொழும்பு பெப். 12

மன்னார் குடாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவிருக்கும் முத்துக்குளிப்பு விஷயத்தில் இந்திய இரத்தின வியாபாரிகள் அதிக அக்கறைகாட்டி வருகிறார்கள்.

இந்தத்தடவை நடைபெறவிருக்கும் முத்துக்குளிப்பின் மூலம் சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கலாம் என்று மீன்பிடி இலாகா எதிர்பார்க்கிறது. கொழும்பு மீன்பிடி துறைமுகத்தில் வைத்து 'டெண்டர்' கோரிக்கை மூலம் முத்துப சிப்பிகள் விற்பனை செய்யப்படும்.

# சர்க்கரை, சூடம் இறக்குமதி தடை

## யாழ்ப்பாண வர்த்தகர் எம். பி. க்குத் தந்தி

யாழ்ப்பாணம்

சர்க்கரைக்கும் கற்பூரத்திற்கும் இறக்குமதித் தடை விதித்தது வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் பெரும் கஷ்டத்தைக் கொடுத்துள்ளதென்று யாழ்ப்பாணத்திலுள்ள வியாபாரிகள் பலர் எம். பி.க்களுக்கும் பிரதம மந்திரிக்கும் தந்தி மூலம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஏ. ரி. துரையப்பாவுக்கு அனுப்பிய தந்தியின் பிரதிகள் பிரதம மந்திரி, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் டாக்டர் நாகநாதன், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், திரு. எஸ். எம். இராசமாணிக்கம் ஆகியோருக்கு அனுப்பப்பட்டன. இத்தந்தி தமிழிலேயே அனுப்பப்பட்டன.

சர்க்கரையும் கற்பூரமும் இந்துக்களுக்கு மிகவும் அவசியமானவையென்றும் இவற்றை முற்ருகத் தடைசெய்யாமல் கட்டுப் படுத்தலாமென்றும் அந்தத் தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. "சம்பந்தப்பட்ட மந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆவன செய்யவும் பேச்சுவார்த்தைக்கு நாங்களும் வரவேண்டுமாயின் அறிவித்தால் வருகிறேரும்" என்று வியாபாரிகள் தமது தந்தியில் எம். பி. யைக் கேட்டுள்ளனர்.

## காவற்காரர் திடீர் மரணம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண நகர மத்தியிலுள்ள ஒரு பெற்றேரல் நிலையத்தில் இரவுக் காவற்காரராகக் கடமையாற்றி வந்த கொட்டடி வாசியாகிய வீரபத்திரர் சிற்றம்பலம் நேற்று காலை இறந்துகிடக்கக் காணப்பட்டார். சிற்றம்பலத்திற்கு சுமார் 70 வயது.

பெற்றேரல் நிலைய மனேஜர் நேற்றுக் காலை தமது நிலையத்தைத் திறக்கச் சென்றபோது காவற்காரர் வீரபத்திரர் சிற்றம்பலம் இறந்துகிடந்ததைக் கண்டு தகவல் கொடுத்தார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினர். வயோதிபரான சிற்றம்பலம் இயற்கைக்காரணங்கள்காரணமாக மரணமடைந்ததாக விசாரணை முடிவில் மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## சீனவில் தாகூர் விழா

பீகிங்

மஹாகவி ரவிந்திரநாத் தாகூரின் நூற்ருண்டு விழா இவ்வாண்டு மேமாதம் சீனவில் கொண்டாடப்படும். தாகூர் பற்றிய படங்களும், அவரது நூல்களும் காட்சிக்கு வைக்கப்படுவதுடன், பெரிய பொதுக் கூட்டமொன்றும் நடைபெறும். இந்தக் கொண்டாட்டங்கள் சீனவிலுள்ள 8 மக்கள் ஸ்தாபனங்களால் கூட்டாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

## கல்லூரிகளில் போதனமொழி

### டாக்டர் சுப்பராயன் கருத்து

சென்னை

"தற்போதைய கட்டத்தில் கல்லூரிகளில் தமிழைப் போதன மொழியாக்குவது சாத்தியமில்லை" என மந்திரி டாக்டர் சுப்பராயன் கூறினர்.

"சென்னை ராஜ்யத்தில் உயர்தரப் பாடசாலைகளில் தமிழை போதன மொழியாகக் கொண்டு வந்ததற்கு நான் பொறுப்பாயிருந்தேன். ஆனல் கல்லூரிகளில் அதை போதன மொழியாக்க எப்பொழுதுமே நான் விரும்பியதில்லை" என்ருர் சுப்பராயன்.

"தொழில் நுட்பம் போன்ற விஷயங்களில் தமிழோ அல்லது வேறெந்த இந்திய மொழியோ போதுமான வளர்ச்சியும் பக்குவமும் அடையவில்லை. கல்லூரிகளில் ஆங்கிலத்தைத் தவிர வேறு எந்த மொழியையும் போதன மொழியாக்குவது சாத்தியமற்றது" என்றும் மந்திரி கூறினர்.

## அரசாங்ககாப்பரேஷன் தலைவர்கள்

### மாதச்சம்பளம் 1500 ரூபாய்க்கு மேல்கூடாது

கொழும்பு பிப். 10

அரசாங்கக் கார்ப்பரேஷன் தலைவர்களுக்கு மாதம் ரூ 1500 க்கு மேல் சம்பளம் இருக்கக்கூடாதென்ற நிதி மந்திரி திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவின் யோசனையை அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது இது சம்பந்தமாக தொழில், தேசியமய சேவை மந்திரி திரு. சரத்விஜயசிங்க, இதரமந்திரிகளிடன் விவாதிக்க விருப்பதாயும் கூறப்படுகிறது.

## இசைமேதை மறைவுக்கு அனுதாபம்

இலங்கை அரசினர் தமிழாசிரியர் சங்கம் பிரபல புல்லாங்குழல் வித்வான் திரு. டி. என். சுவாமிநாத பிள்ளையின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இன்றுள்ள பிரபல சங்கீத வித்துவான்களின் பெரும்பான்மையானேர் திரு. டி. என். சுவாமிநாதபிள்ளையிடம் கற்றவர்களே.

# சின்னக்கடை, பெரியகடை மீன் சந்தை குத்தகைக்காரர் பற்றி விசாரிக்க ஒரு குழு

## மேயர் நியமித்தார்

யாழ்ப்பாணம்

சின்னக்கடை, பெரியகடை மீன்சந்தைக்குக் குத்தகைக்காரர் குத்தகைப்பணத்துக்கு அதிகமாக வசூல் செய்வதாகவும் குத்தகைக்காரரின் குத்தகை ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டு வேறுஎவருக்கும் குத்தகையைக் கொடுக்கவேண்டுமென்ற ஒரு பிரேரணை சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

தற்போதைய குத்தகைக்காரர் 'அநீதியான' முறையில் மீன் விற்பனையாளரிடம் கட்டணம் வசூலிப்பதாக திரு. பி. எம். ஜோன் குற்றம் சாட்டி உடனடியாக அவர்களுடைய குத்தகை ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படவேண்டுமென்று கூறினர். குத்தகை உடன்படிக்கையிலேயே, 'ஒப்பந்தத்தை மீறினல் உடனடியாக ரத்துச் செய்யப்படும்.' என்றநிபந்தனை இருப்பதாக திரு. ஜோன் சுட்டிக்காட்டினர்.

உடனடியாக ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவேண்டுமென்று திரு. ஜோன் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இத் தீர்மானத்தை அனுவதித்து திரு.கே எஸ். நடராசா பேசுகையில் பெரும் பணக்காரர்களான குத்தகைக்காரர்களின் சுரண்டலுக்கு இடமளிக்கக்கூடாதென்றும் ஏழைமக்களான மீன் விற்பனையாளர்கள் பெரும் கஷ்டப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

திரு. எம். ஜேக்கப் பேசுகையில் அரசியல் ஒரு மோசமான சூதாட்டமென்றும் இந்த அரசியல் சூழ்ச்சிதான் மீன் சந்தைக் குத்தகையிலும் இடம் பெற்றிருக்கிற தென்ருர்.

திரு. பி. எம். ஜோன் மீண்டும் பேசுகையில் அரசியல் சூழ்ச்சி என்று சொல்லிவிட்டால் போதாதென்றும் அதை வெளிப்படையாகக் கூற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

திரு. ஏ. ஜி. இராஜசூரியர் பேசுகையில் குத்தகைக்காரர் சில சமயங்களில் கட்டணத் தொகைக்குக் குறைவாகக் கூட வசூலிக்கிருர்களென்றும் குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சேர்ந்த மீன்விற்பனையாளரே குத்தகைக்காரரைக் குறைசொல்கிருர்களென்றும் தெரிவித்தார்.

திரு. பி. எஸ். சோமசுந்தரம் பேசுகையில் எச்சரிக்கை செய்து ஓரளவு அவகாசம் கொடுத்த பின்னரே குத்தகை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ருர்.

உதவி மேயர் திரு. நா. த. செல்லத்துரை பேசுகையில் குத்தகைக்காரரின் நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குழுவை நியமிக்க வேண்டுமென்றும் அந்த அறிக்கையின்படி ரத்துச் செய்வதா இல்லையா என்பதைப் பற்றித் தீர்மானிக்கலாமென்று கூறினர்.

மீண்டும் பலத்த விவாதத்தின்பின் குழுநியமிக்க சபை ஒப்புக்கொண்டது.

திருவாளர்கள் நா. த. செல்லத்துரை, எஸ். ஜே. அழகையா, கே. எஸ். நடராசா ஆகியோர்களை குழுஅங்கத்தவர்களாக நியமித்தமேயர் இம்மாதம் 25-ந் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

## எம். ஜி. ஆர் மன்றக் கூட்டம்

கொழும்பு

இலங்கை எம். ஜி. ஆர் மன்றச் செயற்குழு கூட்டம் கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்றது. திரு ஆர். ஆர். கே. டேலர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். மார்ச் 5-ந் திகதி மன்றத்தின் ஆண்டு விழாவை நடத்துவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## இந்தியா – சீன எல்லைத் தகராறு அறிக்கை

நாளை செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகும் பார்லிமெண்ட் வரவு-செலவுத்திட்டக் கூட்டத் தொடரின் ஆரம்பத்திலேயே எல்லைப்பிரச்சினைபற்றிய சீன, இந்திய அதிகாரிகளின் அறிக்கையை இரு சபைகளிலும் நேருஜி சமர்ப்பிப்பாரென்று தெரிகிறது.

## வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு

இம்மாதம் 13-ந் திகதி திங்கட்கிழமை நடத்துவதாக இருந்த ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தை ஒத்திவைப்பதென்று தமிழ்நாடு மின்சார ஊழியர் சம்மேளனம் முடிவு செய்துள்ளது.


தேசிய தினசரி **ஈழநாடு** சந்தா விபரம்

| | தபாற் செலவுடன் | ஏஜெண்டுகள் மூலம் |
|---|---|---|
| ஒரு வருடம்: | ரூ. 45-00 | ரூ. 36-00 |
| 6 மாதம்: | ரூ. 22-50 | ரூ. 18-00 |
| 3 மாதம்: | ரூ. 12-00 | ரூ. 10-00 |

மூன்று மாதத்துக்குக் குறைந்த சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் சமீபத்திலுள்ள ஏஜெண்டுகளிடம் சந்தாவைச் செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேம்.

**ஈழநாடு**
63, சிவன் கோவில் மேலை வீதி,
தபாற் பெட்டி எண்: 49,
யாழ்ப்பாணம்.

## மணிவாக்கு

வாழ்விலே உயர்ந்தது சீலமுடைமை. சீலத்திஞல் விளைவது விவேகம். விவேகத்திஞல் உண்டாவது வைராக்கியம். வைராக்கியத்தால் வருவது சாந்தி —சுவாமி துரியாநந்தா


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம், சார்வரி ஆண்டு மாசி மீ 2 உ (13-2-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna.
Telegrams EELA NADU Jaffna. Phone: 389


## வாழ்க்கைச் செலவைக் குறைக்க வழி

நமது வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக, நிதி மந்திரியும், பல வர்த்தக சங்கங்களும் கொழும்பில் சனிக்கிழமை கூடி ஆலோசனை செய்தார்கள். வர்த்தகர்களுக்குச் சில கடுமையான எச்சரிக்கை செய்தார் நிதிமந்திரி. புதிய வரிகள் விதிக்கப்படாத பொருள்களைப் பதுக்கி, விலைகளைக் கூட்டி கொள்ளை லாபமடித்தால், அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமென்ருர் மந்திரி.

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்று வசனமுண்டு. அதுபோல, அதே கூட்டத்தில், தேசிய வர்த்தக சங்கத் தலைவர், இவ்வித மகாநாடுகளால் எவ்வித பயனும் ஏற்படட்டதில்லை என்று பச்சையாகத் தெரிவித்தார். வர்த்தகர்கள்மீது அரசாங்கம் சற்றே அதிக நம்பிக்கை வைத்தால், வர்த்தகர்களின் அதிக ஒத்துழைப்பை அது பெறமுடியுமென்ருர். கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தை பல வர்த்தகர்கள் தாக்கி, தனிப்பட்ட வர்த்தகர்களைவிட, கூட்டுறவு சங்கக் கடைகள் அதிக விலைக்கு சாமான்களை விற்பதாகவும் அதே கூட்டத்தில் புகார் தெரிவித்தனர்.

முடிவில் வர்த்தகர்கள் லாபம் பெறுவதை அரசாங்கம் எதிர்க்கவில்லை என்றும் புதிய கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதிக்கப்போவதில்லை என்றும், ஆகவே வர்த்தகர்கள் சாமான்களைப் பதுக்காமல், விலைப்பட்டியை கடைக்குமுன் பொது மக்கள் பார்க்கும்படி முன்போல் தொங்கவிடவேண்டுமென்றும் நிதிமந்திரி கேட்டுக் கொண்டபின், மீண்டும், வருகிற சனிக்கிழமை இருசார்பினரும் கூடுவதென்று தீர்மானித்துக் கலைந்தனர். இப்பேச்சுக்களின் பயஞக பொருள்களின் விலைவாசிகள் ஓரளவாவது குறைந்தால் நல்லதே. ஆனல் முந்திய அனுபவங்கள் இதற்கான நம்பிக்கையை நமக்கு அளிப்பதாக இல்லை.

நமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களுக்கு தீர்வைகளை அதிகரிக்கவில்லை என்றும் உல்லாசப் பொருள்களுக்கே தீர்வையைக் கூட்டியிருப்பதாகவும் மந்திரி கூறுகின்ருர். ஆனல் நவநாகரிக வளர்ச்சியால், சாதாரண மக்களும் உல்லாசப் பொருள் எனப்படுபனவற்றை உபயோகித்து அவர்களில் பலருக்கு அவை அவசியப் பொருள்களாகவும் மாறி வருவதைப் பார்க்கின்ருேம். அரசாங்கம் திடீரெனத் தீர்வைகளைக் கூட்டும் போது எல்லாப் பொருள்களின் விலைகளையும் அது பாதித்து, நம்மில் பலருக்கும் திகைப்பளிப்பதாக இருக்கின்றது.

பாகிஸ்தான், அல்லது ரஷ்யாவைப் போல் சர்வாதிகார ஆட்சி நடைபெறுவதாக இருந்தால் விலைகளைக் கட்டுப்படுத்த ஓரளவு முடியலாம். ஆனல் ஜனநாயகம் என்று சொல்லப்படும் இந்த ஆட்சி முறை சிறுபிள்ளை விவசாயம் செய்வது போலுள்ளது. விலைக்கட்டுப்பாடு அதிகாரிகளையும் நம்ப முடியவில்லை என்றும் ஒப்புக்கொள்ளுகிருர் மந்திரி. ஆகவே இந்நிலையில் நமது வாழ்க்கைச் செலவைக் குறைக்க ஒரே வழி, நாம் கூடுமானவரை ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, எளிய சிக்கன வாழ்க்கை நடத்த முற்படுவதேயாகும். யுத்த காலத்தில் பிரிட்டிஷ் பொது மக்கள் அவ்விதமே செய்து வெற்றிபெற்றனர். 'இந்தியாவிலும் சிக்கன வாழ்க்கை நடத்த வேண்டுமென்று மக்களுக்குக் காந்தி அடிகள் உபதேசித்தும் தாமும் அவ்விதமே வாழ்ந்தார். அந்த உபதேசத்தைக் கூடுமான வரை பின்பற்றுபவர் தங்கள் வாழ்க்கைச் செலவையும் சங்கடங்களையும் பெரிதும் குறைத்துக் கொண்டவராவர்.

## கண்ணேட்டம்

### லுமும்பா

கடாங்கா சிறையிலிருந்து லுமும்பா தப்பியதாக வெளியான செய்தியை நம்மால் நம்ப முடியவில்லை. பெல்ஜியம் அடிவருடியான ஷோம்பி அவரது ஜன்மசத்துரு. ஐந்துகோடி பிராங்குகள் கொடுத்து, லுமும்பாவை அவர் தமது சிறைக்கைதியாக மாற்றிக் கொண்டதாக 'நியூடைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது. லுமும்பா உயிருடன் இருக்கும்வரை தமக்கும் தமது பெல்ஜிய எஜமான்களுக்கும் ஆபத்தென்பதை நன்குணர்ந்த ஷோம்பி, தமது சிறையிலிருந்து அவ்வளவு சுலபமாக லுமும்பா தப்பிவிடும்படி ஏமாளியாக விட்டிருப்பாரா? மேலும் இவ்விஷயமாக கடாங்காவிலிருந்து வெளியான செய்திகள் முன்னுக்குப்பின் முரணுக இருக்கின்றன. லுமும்பா தப்பிய மோட்டாரில் 60 மைல் தூரம் செல்லும்படியான பெட்ரோலே இருந்ததாக முதலில் கூறினர். பின்னர் 200 மைல்களுக்கப்பால் அந்தமோட்டார் கிடைத்ததாக கூறுகின்றனர். மோட்டாரில் துப்பாக்கிகள் எதுவுமில்லை என்று முதலில் அறிவித்தவர்கள், பிறகு தோட்டாக்கள் இல்லாத இரு துப்பாக்கிகள் இருந்ததாகக் கூறுகின்றனர். ஒரு பொய்யை மறைக்க பல பொய்கள். லுமும்பா தப்பியது உண்மையா? என்பதை அறிய ஐக்கியநாட்டுசபை பிரதிநிதிகள் கடாங்காவுக்குச் சென்றிருக்கிருர்கள். உண்மை இரண்டொரு நாட்களில் தெரிந்துவிடும். அவர் மட்டும் கொலை செய்யப்பட்டிருந்தால், அது களாவுபு, ஷோம்பி இவர்களுக்கு மட்டுமன்றி, பெல்ஜியத்துக்கும், ஐக்கிய நாடுகள் சபைக்குமே பெருங்கேடாக முடியும்.

### ரோட்டரி மகாநாடு

கொழும்பில் கூடிய சர்வதேச ரோட்டரி மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு. ஹரி, ரோட்டரி ஸ்தாபனம பணக்காரருக்காக பணக்காரரால் நடத்தப்படுவதல்லவென்றும், பணம் சம்பாதித்து, அதை நன்கு செலவழிக்க மக்களைத் தூண்டுவதே அதன் நோக்கமென்றும், வங்காளத்தில் பஞ்சம் வந்தபோது, பல அன்னதான கூடங்களை நடத்தி பணி செய்ததாகவும் கூறுகிருர். இப்போது உலகிலே 120 நாடுகளில் இந்த ஸ்தாபனத்தில் மொத்தம் 5 லட்சம் அங்கத்தவர்களுக்கு மேலுள்ளனராம். உண்மையில் இச்சர்வதேச ஸ்தாபனம், நாட்டில் தர்மங்களை வளர்க்கச் செய்யுமாயின், அது பயனுள்ள பெரும் பணி செய்ததாகும். இன்று பொதுவாக தர்மங்கள் பெரிதும் குறைந்துவிட்டன. சுயநலமும் பேராசையும் மேலிட்டுவிட்டன. இதஞல்தான் கம்யூனிஸம் முதலிய புரட்சி இயக்கங்கள் வளருகின்றன. செல்வந்தர்கள், பிறர் நலம் பேணி, அன்புடன் காரியங்கள் செய்தால, அவர்கள் நாட்டுக்கு மன்றி தங்களுக்கும் நன்மை செய்துகொண்டவர்களாவர். இவ்வகையில் ரோட்டரி ஸ்தாபனம் வெகுதூரம் தொண்டு செய்ய இடமுண்டு.



## இன்று மகாசிவராத்திரி புண்ணியதினம்

பாடல்பெற்ற ஸ்தலமும், சிவஷேத்திரமுமான, திருக்கேதீச்சரத்தில் 400 வருடங்களாக மறைந்திருந்த புராதன மகா லிங்க மூர்த்திக்கு, மகா சிவராத்திரியான இன்று இரவு, ஒவ்வொரு சாமத்துக்கும் 108 தொண்டர்கள் பாலாவியிலிருந்து தீர்த்தக்காவடி எடுத்து வந்து, தாமே அபிஷேகம் செய்கின்ருர்கள். இப்புண்ணிய விரதத்தை அனுஷ்டிக்க, அங்கு ஏராளமான பக்தர்கள் கூடியுள்ளனர்.

## கண்களைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே

இன்று திங்கட்கிழமை மகா சிவராத்திரி புண்ணிய தினம். சிவராத்திரி என்பது சிவனது இரவு எனப் பொருள்படும். எவ்விரவும் சிவனிரவு எனக் கருதும் பெரியார்களும் ஏனைய சைவ நன் மக்களுக்கும் இவ்விரவு ஓர் அரிய இரவாகும்.

சிவனது இரவு, சிவனுக்குகந்த இரவு, சிவ வழிபாட்டிற்குரிய இரவு, திருவருளாகிய சிவசக்தியின் வேண்டுகோளுக்கிணங்கச் சிவன் அருள் பாலித்த இரவு, பிரமவிட்டுணுக்களாகிய ஆன்மாக்கள் ஆணவத்திஞல் தம்மை மறந்து தருக்கித்துப் போர் புரிய முயன்றபோது சிவபிரான் ஒளி வடிவாகக் காட்சியளித்த இரவு என்றெல்லாம் பலவகையாகக் கூறலாம்.

### வரலாறு

கற்ப காலத்தில் பிரமன் ஒடுங்கிஞன். அவஞல் படைக்கப்பட்ட உலகம் ஒடுங்கியது. பிரளயத்தில் உயிர்களும் ஒடுங்கின. அவ்விரதத்தில் திருவருட் செல்வியாம் உமையம்மை சிவபிராஞுக்கு நான்கு ஜாமமும் அர்ச்சனை புரிந்தாள். அதன்பின் உகாந்தம் நிலவியது.

உமையம்மையார் இறைவன் இடப் பக்கமாய் அமர்ந்து தான் இறைவனை வழிபட்ட இரவில் தன்னைப்போல் விழித்திருந்து வழிபாடியற்றும் ஆன்மாக்களுக்கு வீடுபேற்றை நல்க வேண்டுமென வேண்டிக் கொண்டார். வேண்டுவதை ஈந்தருளும் வள்ளலும் அதற்

(5ஆம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கொழும்பில் ரயிலேறினேன். நண்பர் மனைவியாருடன், யாழ்ப்பாணம் வருவதாயும், சிவராத்திரி விரதத்தை சிவதொண்டன் நிலையத்தில் அனுஷ்டிக்கப் போவதாகவும் மகிழ்ச்சியுடன் கூறிஞர்.

அங்குள்ள நிகழ்சிகளைப்படித்துப் பார்த்தேன். கூட்டுப் பிரார்த்தனை, பஜனை, தியானம், புராண படனம், பக்திப் பாடல் எல்லாம் இடம்பெற்றுள்ளன. ஓர் அன்பர் திருக்கேதீச்சரத்திலிருந்தும், இதில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வந்துள்ளதாக அறிந்தேன். வியப்பாக இருந்தது!

* * *

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களோ! காங்கேசன் துறை வீதியிலே ஒரு புதிய மச்சுக்கட்டடம். முன்புறம் மச்சின் மீது, ஓம்காரத்துக்குள்ளே மகாலிங்கமும், இருபுறம் விநாயகரும் உள்ள அழகான வர்ண சிற்பம் கண்டோர் கண்களையும் மனதையும் கவர்வதாகவுள்ளன.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தினக் கம்பளம்

பதுமன்

வேட்டை முடிஞ்சு போச்சுத் தம்பி
வீட்டுக்கு வாங்கோ
காட்டை உழுது பயிர் செய்து
கஞ்சி வாருங்கோ

என்று பாடிக்கொண்டே அன்பர் ஒருவர் படிக்கட்டைக் கடந்து உள்ளே வந்தார். 'என்ன! உத்தியோக மோகம் தீர்ந்துவிட்டதா?' என்று கேட்டேன். கொழும்பிலிருந்து லீவிலே வந்த அந்த அன்பருக்கு நான் கேட்ட கேள்வி அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

அரசாங்க உத்தியோகத்தைக் கைவிட எந்தத் தமிழன் விரும்புவான் என்று கூறுவது போல் அவர் என்னை ஏற இறங்கப் பார்த்தார். பின்னர் அவரே தனது கதையை ஆரம்பித்தார்.

பாருங்கள்! தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம் இப்போது பொருளாதார விருத்தியில் ஆர்வம் கொண்டிருக்கின்றது. இதில் முதல் வேலையாக வவனியாவிலுள்ள கமக்காரர்களுடன் தொடர்புபூண்டு அவர்களுடைய ஒத்துழைப்புடன் அங்கு சில கமத்தொழில்முகாம்களை நிறுவ முடிவு செய்திருக்கின்றது. நான் நாளைக் காலை யாழ்தேவியில் வவனியா போய் மத்திய வகுப்புக் கமக்காரர் சிலரைச் சந்தித்துப் பேசவேண்டுமென்று சொல்லிக் கொண்டே அவசர அவசரமாகப் புறப்பட்டார் அவர்.

"ஆமாம், உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை" என்று ஔவைக்கிழவி தெரியாமலா சொல்லி வைத்தார் என நான் எனக்குள்ளே எண்ணிக் கொண்டேன்!

### 'யாழ் அகற்றுச் சங்கம்'

சென்ற வருடம் ஆங்கிலத் தினசரி ஒன்றிலே முல்லைத்தீவில் 'யாழ் அகற்றுச் சங்கம்' ஒன்று தோன்றியிருப்பதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அப்போது எவரும் இச்சங்கத்தைப்பற்றி அவ்வளவாகக் கரிசனை கொள்ளவில்லை. சும்மாபெயரளவில் இருந்த அந்தச் சங்கம் முல்லைத்தீவிலும், வவனியாவிலுமுள்ள தமிழ் மக்களிடையே பிரிவினையை உண்டாக்கிவிட்டுக் கூத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

இப்போது என்னவென்ருல் வவனியாவிலுள்ள கச்சேரியைக்கூட முல்லைத்தீவுக்கு 'அகற்றி'விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்போம் என்று அங்குள்ள தமிழர் சிலர் சொல்லுமளவுக்கு விஷ(ய)ம் வளர்ந்துவிட்டது.

சில தினங்களுக்கு முன்னர் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் பிரமுகர்களில் ஒருவரான அன்பர் வெள்ளையன் யாழ்ப்பாணக் கூட்டம் ஒன்றிற் பேசும்போது மலைநாட்டுத் தமிழன், மட்டக்களப்புத் தமிழன், யாழ்ப்பாணத் தமிழன், கருவாக்காட்டுத் தமிழன் என்று எல்லாம் வித்தியாசம் இருக்கக்கூடாது. தமிழன் உலகில் எந்தப் பாகத்தில் வசித்தாலும் அவன் இனத்தால் 'தமிழன்' என்பதை நாம் மறந்து விடலாகாது என்று முழக்கியிருந்தார். திரு. வெள்ளையன் இப்படிச் சொல்லி வாய் மூட முன்னரே முல்லைத்தீவில் 'வியாதி' ஆரம்பமாகிவிட்டது. முல்லைத்தீவு மக்களை யாழ்ப்பாணத்தில் காணி பூமி வாங்க யார் தடை செய்கிருர்கள்!

(8 ஆம் பக்சம் பார்க்க)

# "உடனடியாக தீர்வுகாணவிடில் இரத்தக்களரி ஏற்படும்"

## காங்கோ பற்றி நேரு கருத்து

'காங்கோ பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாணவிடடால் காங்கோவில் இரத்தக் களரி ஏற்படும்' என்று பாரதப் பிரதமர் நேரு எச்சரிக்கை செய்தார்.

காங்கோவின் சட்டபூர்வமான பிரதம மந்திரியின் கதி என்ன? என்பது ஒன்றுமே தெரியவில்லை.

கடாங்காவில் சிறைவைக்கப் பட்டிருந்த லுமும்பாவின் கதி என்ன என்பதுபற்றி ஆராய்வதற்காக காங்கோவிலுள்ள ஐ. நா. பாதுகாப்புப் படைத் தளபதி லியப்போல்ட் வில்லியிலிருந்து கடாங்காவின் தலைநகரான எலிஸபெத் வில்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஐ. நா. விலுள்ள ரஷ்யப்பிரதிநிதி திரு. ஸோரின் பாதுகாப் சபையின் இம்மாதத் தலைவருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் லுமும்பா பற்றி பொதுக்காரிய தரிசி ஹமர் ஷீல்ட் விளக்கம் தராததற்கு வருத்தம் தெரிவித்துள்ளார்.

காங்கோ நிலைமை பற்றி விவாதிப்பதற்காக ஐ. நா. பாதுகாப்புச் சபை இன்று திங்கட்கிழமை மீண்டும் கூடுகிறது.

காங்கோ பற்றி பாதுகாப் புச்சபை இரகசியமாகக் கூடி விவாதிக்க வேண்டுமென ரஷ்யப் பிரதிநிதி கூறியயோசனையை பாதுகாப்புச்சபை பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடித்து விட்டது.

நியுயோர்க்கில் ஆபிரிக்க ஆசியநாட்டுப் பிரதிநிதிகள் கூடி லுமும்பாவின் நிலைமை பற்றி அறிய ஐ. நா. பொதுக் காரியதரிசி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

பாரிஸில் கடாங்காவுக்காக 'கூலிப் பட்டாளம்' திரட்டும் ஷோம்பேயின் நடவடிக்கைக்கு பிரஞ்சு அரசாங்கம் தடை செய்திருப்பதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

---

### பஸ்தார்ராஜா கைது

#### சகோதரர் ராஜாவானர்

நேற்று முன்தினம் மத்திய பிரதேசத்திலுள்ள பஸ்தார் ஜில்லாவில் கைதுசெய்யப்பட்ட பஸ்தார் மகாராஜா தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டார்.

இவர் லோபாவில் உள்ள நர்சிங்க சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவருக்குப் பதிலாக இவரது சகோதரரைப் பஸ்தார் மகாராஜாவாக ராஷ்டிரபதி அங்கீகரித்துள்ளார்.

அரசாங்கத்துக் கெதிராக குழப்பத்தையும் கலகத்தையும் ஏற்படுத்த முயற்சி செய்ததாகவும் பழைய ஆஸ்தான ராஜாக்களைச் சேர்த்து சங்கம் அமைத்து சதிபுரிய முயன்றதாகவும் கைது செய்யப்பட்ட மகாராஜா மீது குற்றம் கூறப்பட்டது.

---

### இரத்தினக் கம்பளம்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

#### நேருஜியும் களைப்பும்

'இவ்வளவு காலமும் பிரதமராகப் பதவி வகித்தது போதும் எனக்குக் களைப்பு ஏற்பட்டு விட்டது. பொது வாழ்விலிருந்து நான் ஒதுங்க விரும்புகின்றேன்' எனப் பாரதப்பிரதமர் நேருஜி சில வருடங்களுக்கு முன்னர் கூறியபோது காங்கிரஸ்காரர் திகிலடைந்து விட்டனர். 'ஐயோ! தங்களைப் போன்ற ஒருவரே இந்த வேளை எமக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்' என நேருஜியைப் பார்த்துக் கெஞ்சினர். நேருஜியும் அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். உலகமும் திருப்தியடைந்தது.

'அந்தக் களைப்பு' பாரதப் பிரதமருக்கு மீண்டும் வந்தது. தாம் கொஞ்சக்காலம் ஒதுங்கியிருக்க விரும்புவதாக அவர் தெரிவித்தாராம். உடனே நாலா பக்கத்திலிருந்தும் 'ஒதுங்கவேண்டாம்' என வேண்டுகோள் எழுந்தது. 'சரி அப்புறம் பார்க்கலாம்' என்று நேரு சொல்லிவிட்டார்.

பொதுத் தேர்தல் நெருங்கும் போது தான் நேருஜிக்கும் 'களைப்பு' வருகின்றது. இதன் உட்கருத்தென்ன?

#### சினிமாப்பாட்டும் செடியும்

இசையின் மூலம் செடி கொடிகளின் வளர்ச்சியில் விருத்தி ஏற்பட்டுவருவதாக அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் தெரிவித்ததை வாசகர்கள் இதற்கிடையில் மறந்திருக்கமாட்டார்கள்,

"செடிகள் கர்நாடக சங்கீத மூலம் வளர்ச்சியடைவதாகவும், சினிமாப்பாட்டுகளுக்கு அவை வளர்ச்சியடைய மறுத்து விட்டதாகவும் கூறப்படுவது உண்மை தானா?"

இந்தக்கேள்வியைச் சென்னை அசெம்பிளியில் ஒருவர் கிளப்பியிருந்தார். அப்படித் தகவல் ஒன்றுங் கிடைக்கவில்லையென மந்திரி பக்தவத்சலம் கூறினாராம்.

---

### இரண்டு சீனர் வெளியேற்றம்

இந்தியாவிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்ட 70 சீனப்பிரஜைகளில் மிகவும் விரும்பத் தகாதவர்களென்று கருதப்பட்ட இருவரை இந்தியா வெளியேற்றிவிட்டது.

---

### மத்திய குழு இவ்வாரம் கூடுகிறது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாரத்தில் திரு. செல்வநாயகம் யாழ்ப்பாணம் வருகின்றார்.

#### திட்டங்கள் இரகசியம்

நேரடி நடவடிக்கைத் திட்டங்கள் யாவும் மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களைப் படிப்படியாக அமுலுக்குக் கொண்டு வரும் சமயத்தில் மட்டும் இத்திட்டங்கள் தொண்டர்களிடம் வெளியிடப்படுமென்று தெரிகிறது.

நேரடி நடவடிக்கையின் திட்டங்கள் யாவும் திரு. செல்வநாயகத்திடமே இருப்பதாகவும் திரு. செல்வநாயகத்தையே இவ்விஷயத்தில் சர்வாதிகாரியாக்கியிருப்பதாகவும் கட்சி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

தனித் தனியாக ஒவ்வொரு கிராமத்திலும் தொண்டர்களைச் சேர்க்கும் திட்டம் வெற்றியளித்திருப்பதாகவும் நேரடி நடவடிக்கையின் இரண்டாவது கட்டம் பரபரப்பை ஏற்படுத்தலாமென்றும் நம்பப்படுகிறது.

ஒவ்வொரு தொகுதியிலும் தொண்டர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளவர்களை அத்தொகுதியைச் சேர்ந்த தமிழரசுக்கட்சி எம். பி. தனித் தனியாக அழைத்து போராட்டம்பற்றி விளக்கப்படுத்தி வருவதாகவும் தொண்டர்களுக்கு இப்பொழுதே பயிற்சியளிக்கப்பட்டு வருகிறதென்றும் தெரிகிறது.

#### காங்கிரஸ் மறுப்பு

தமிழரசுக் கட்சி ஆரம்பித்துள்ள நேரடி நடவடிக்கையை தமிழரசுக் கட்சியே நடத்தி முடிக்கவேண்டுமென்றும் கட்சியில்லாத தமிழ் மக்களின் போராட்டமானால் தமிழ்க்காங்கிரசும் கலந்துகொள்ளத் தயாரென்று தமிழ்க் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கை தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த பலரினதும் சிந்தனையைக் கிளறியிருப்பதாகத் தெரியவருகிறது.

தமிழரசுக் கட்சியின் மேலிடம் தமிழ்க்காங்கிரஸின் அறிக்கைபற்றி எவ்வித முயற்சியும் செய்யாதுவிட்டாலும் கட்சியைச் சேர்ந்த சிலர் காங்கிரஸின் ஒத்துழைப்பையும் பெறுவதற்கு முயற்சி செய்வார்களென்று அறியப்படுகிறது.

---

பார்லிமெண்டில்

### அரசாங்கம் மன்னிப்பு கோரியது

கொழும்பு, பெப். 12

உலக சுகாதார ஸ்தாபனத்தில் சீனவை அனுமதிக்கக் கோரும் பிரேரணை ஒன்றின் மீது நடந்த வாகெடுப்பில் உலக சுகாதார ஸ்தாபனத்துக்கான தனது தூதுகோஷ்டி கலந்துகொள்ளாதது குறித்து நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் பிரதிநிதிகள் சபையில் அரசாங்கத்தின் சார்பில் மன்னிப்புக் கோரினர்.

திரு. பண்டாரநாயக்கா பிரதிநிதிகள்சபையில் பேசுகையில் ஐ. நா.விலும் இதர உலக ஸ்தாபனங்களிலும் சீன இடம் பெற வேண்டுமென்பதை அரசாங்கம் எப்பொழுதும் ஆதரித்து வந்திருக்கிறதென்று கூறினர்.

---

### மயில்: இந்தியாவின் தேசியப்பறவை

மயில், இந்தியாவின் தேசியப் பறவையாகக் இருக்க வேண்டுமென்று இந்தியவன விலங்கு பாதுகாப்பு சபை முடிவு செய்திருக்கிறது.

இந்தியதேசியப் பறவை எதுவாக இருக்கவேண்டுமென்று முடிவு செய்வதற்காக மேற்படி சபை நான்குதினங்கள் கூடி ஆலோசித்தது. சபையின் சில அங்கத்தினர்கள் அன்னம் போன்ற பறவைகளின் பெயர்களைக் குறிப்பிட்டனர். என்றாலும் பெரும்பானமையானவர்கள் மயிலை தேசியப் பறவையாக முடிவு செய்தனர் என்று இந்திய விவசாயமந்திரி திரு. பி. எஸ். தேஷ்முக் தெரிவித்தார். திரு. தேஷ்முக்சபைக் கூட்டத்துக்கு தலைமைவகித்தார். தேசியப்பறவை சம்பந்தமாக சபை வேறொருதடவை கூடி இறுதியான முடிவொன்றைச் செய்யும்.

---

### இலங்கைக்கு கான தூதர்

கொழும்பு பெப். 12

கான அரசாங்கம் திரு. சமுவலகியாஸி நிமாக்கோ என்பவரை இலங்கையில் தனது முதலாவது தூதுவராக நியமித்திருக்கிறது.

---

### இலங்கை பற்றிய சோவியத் ஓவியம்

கொழும்பு

இலங்கை மக்களின் வாழ்க்கையையும், கலாசாரத்தையும் சித்தரிக்கும் சோவியத் சித்திரக்காரர் வி. கொரியாயேவின் ஓவியங்களைக் கொண்ட கண்காட்சி ஒன்று கொழும்பில் பெப்ரவரி 10-ந் திகதி முதல் 14-ந் திகதி வரை நடைபெறுகிறது.

சோவியத் - இலங்கை நட்புறவுக் கழகத்தின் தூதுகோஷ்டியுடன் சமீபத்தில் இலங்கைக்கு கொரியாயேவ் வந்திருந்தார். இவரது ஓவியங்கள் மாஸ்கோவில் சில வாரங்களுக்கு முன்பு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

---

### நேபாளத்தில் மற்றொருவர் கைது

நேபாளத்திற்கு எலிஸபெத் மகாராணி இம்மாதம் விஜயம் செய்வதற்கு ஆட்சேபம் தெரிவித்துத் துண்டுப்பிரசுரங்களையும் சுவரொட்டிகளையும் விநியோகம் செய்துவந்ததற்காக நேபாளத்தில் நேற்று மீண்டும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதுவரை மொத்தம் 11 பேர் இதுசம்பந்தமாகக் கைதாகியுள்ளனர்.

---

### மன்னிப்பை ஏற்க மறுப்பு!

சோவியத்து அதிபர் பிரஸ்னே சென்ற விமானத்தை நோக்கி பிரஞ்சு போர் விமானமொன்று சென்ற வாரம் இரண்டு தடவை சுட்டதற்குப் பிரஞ்சு அரசாங்கம் மன்னிப்புக் கோரியது. பிரான்ஸின் மன்னிப்பை ரஷ்யா ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதாக வாஷிங்டன் வானொலி தெரிவித்தது

---

### லுமும்பா அடித்துக் கொல்லப்பட்டார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிக சந்தேகமான பதிலே கிடைத்தது. "லுமும்பா ஒரு கைதி" நாங்கள் கறுப்பர்கள். கைதிகளின் கதியைப்பற்றி நாங்கள் பேசுவது கிடையாது. நாங்கள் ஐரோப்பியரல்ல. அதை மறக்காதீர்கள்" என்று ஷோம்பி பதிலளித்தார்.

"அப்படியானல் லுமும்பா காரியம் முடிந்துவிட்டதா?" என்று கேட்டதற்கு "இல்லை" என்று தயக்கத்துடன் மெதுவாக இழுத்தார்.

லுமும்பாவையும் அவரது இரு சகாக்களையும் கடாங்காவுக்கு விமானத்தில் ஓட்டிச் சென்ற விமானிக்கு இவ்விஷயத்தில் சந்தேகமில்லை. அவர் கூறினர், "விமானததில் 20 ஆயுதபாணிகளுக்கு மேல் அவரை காவல் செய்தனர். லுமும்பாவின் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன. எனினும் அவர் விமானத்திலிருந்து இறங்குகையில், துப்பாக்கிக் கட்டையால் அவரை அடித்துக்கொண்டே வந்தனர். அவ்வித சித்திரவதையாலும் தாங்கமுடியாது மோட்டார் டிரக்கில் லுமும்பாவை சிறைக்குக் கொண்டுபோகையில் அவர் மீது அவர்கள் ஏறிக் குதித்து மிதித்தனர்" என்றார்.

இனி, லுமும்பாவையோ அவரது பிணத்தையோ யாரும் பார்க்க முடியாதென்றே கருதப்படுகிறது.

இதற்கிடையே பாரிஸில் ஷோம்பி ஒரு கூலிப் பட்டாளத்தைத் திரட்டுகிறார். "காடங்கா மிஷன்" என்று அதற்குப் பெயர். அதிக சம்பளம் கொடுக்கப்படுவதால், ஏராளமானவர்கள் சேர முன்வருகிறார்கள் இதற்கு பிரெஞ்சு அரசாங்கம் தடைவிதித்திருப்பதாகத் தெரிகிறது.

---

### இந்தியாவில் இலங்கை பிரசாரம்

—நமது கொழும்பு நிருபர்—

இலங்கையின் பொருளாதார சங்கடங்களைப் பற்றி இந்தியாவில் பிரசாரம் செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

இங்கு பொருளாதார நிலை மேலாக இருப்பதாகக் கருதி, கள்ளத்தனமாக பலர் இந்தியாவிலிருந்து இலங்கை வருவதாயும் இதைத் தடுத்து நிறுத்துவதற்கு இப்பிரசாரம் ஒரு முயற்சியாகும்.

இலங்கையில் நிலவும் வேலையில்லாத்திண்டாட்டத்தையும் பொருளாதார சங்கடத்தையும் இந்தியாவிலுள்ளவருக்கு விளக்கினால் கள்ளக்குடியேற்றம் ஓரளவாவது குறையலாமென்று நம்பப்படுகிறது.

---

### குடும்பக் கட்டுப்பாடு திரு. மேனன் கருத்து

புதுடில்லி

குடும்பக் கட்டுப்பாட்டின் மூலம் ஜனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த எத்தனிப்பது குறித்து இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ண மேனன் ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

"உலகத்தில் பிறந்துவிட்டவர்கள் தமக்குப்பின் பிறக்க விருப்பவர்களைத் தடை செய்யும் முயற்சியாகத்தான் குடும்பக் கட்டுப்பாடு இருக்கும்" என்று திரு. கிருஷ்ண மேனன் சொன்னர்.

அணுசக்தியை சுகாதாரத்துக்காக உபயோகிப்பது சம்பந்தமாக இங்கு நடைபெற்ற ஒரு பொருட்காட்சியில் அணுசக்தியைச் சமாதான நோக்கங்களுக்காக உபயோகிப்பது குறித்து திரு. கிருஷ்ணமேனன் உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

---

### 64 பூனைகள் விற்பனை

நான்லிகாட்டன் என்ற பியானோ இசைக் கலைஞரின் 64 பூனைகள், அவருடைய கடனை அடைப்பதற்காக விற்கப்படும்.

---

### ஆந்திர அரசாங்கத்தை கலைக்க வேண்டுகோள்

ஆந்திராவில் காங்கிரஸ்கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதால் அங்கு காங்கிரஸ் ஆட்சியைக் கலைத்து பொதுத்தேர்தல் வரை ஜனதிபதி ஆட்சியை ஏற்படுத்துமாறு பிரஜா சோஷலிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

---

### காங்கோவுக்கு உதவ சீனமக்கள் ஆர்வம்

பீகிங், பெப். 11

காங்கோ மக்களுக்காக சீன மக்கள் தங்களாலியன்ற உதவிகளை செய்வார்களென்று சீனக்குடியரசுத் தலைவர் திரு. லியுஷோசி காங்கோவின் முன்னாள் பிரதமர் லுமும்பாவின் ஆதரவாளரான திரு. அன்டொயின் ஜின்ஸெங்கா விடம் கூறியிருக்கிறார்.

# ஈராக்கில் ஜெனரல் காசிம் ஆட்சிக்கு எதிராகக் கொந்தளிப்பு

வெளித் தோற்றத்தில் அமைதியாகத் தென்படும் இன்றைய ஈராக்கில் ஜெனரல் காசிமின் ஆட்சிக்கு எதிராக கொந்தளிப்பு ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படாமல் இல்லை. 1958-ம் ஆண்டு ஜூலை 14-ம் தேதி முடியாட்சியை ஒழித்து பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் ஆட்சி பீடம் ஏறிய காசிம், நாட்டில் வலதுசாரி, இடதுசாரி சக்திகளிடமிருந்து தமக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பை எதிர்நோக்கி வருகிறார். ஒருவருக்கொருவர் முரண்பட்ட தேசியவாதிகளும், கம்யூனிஸ்டுகளும் காசிமை ஏற்கத் தயாராய் இல்லை.

## 1958-ம் ஆண்டுப் புரட்சி

1958-ம் ஆண்டு நடைபெற்ற புரட்சிக்குப் பின் பாக்தாத் ஆட்சி கெய்ரோவைப் பின்பற்றுமென்ற அறிகுறி தென்பட்டது. ஆனால் ஈராக்கிலுள்ள அகண்ட அராபிய இயக்கத்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர் அல்லது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். காசிமின் சர்வாதிகாரமே மேலோங்கி நின்றது. ஆயினும் கம்யூனிஸ்டுகள் நாளுக்கு நாள் தலைதூக்கி வந்தனர். வெளிநாட்டிலுள்ள அவதானிகள், ஈராக் கம்யூனிஸ்ட் முகாம் நாடுகளில் ஒன்றாகி விட்டதாய்க் கருதினர், மோஸ வேலும் கேர்கூக்கிலும் ஏற்பட்ட பலாத்கார கிளர்ச்சியை கம்யூனிஸ்டுகள் தேசியவாதிகளைக் கொன்று சித்திரவதை செய்தனர். அதற்கு முன் கம்யூனிஸ்டுகள் நாளுக்கு நாள் செல்வாக்கும், அதிகாரிகளினதும் பொலிசாரினதும் பாதுகாப்பும் பெற்று வந்தனர். கிராமங்கள், நகரங்கள் அரசாங்க காரியாலயங்கள், இராணுவம் உட்பட பலவிடங்களிலும் கம்யூனிஸ்ட் பிரசாரம் பரவி வந்தது.

ஆனால் கெர்கூட் சம்பவத்திற்குப் பின் காசிமின் போக்கு மாறியதைத் தொடர்ந்து கம்யூனிஸ்டுகளின் பிடிப்பு தளர்ந்தது. தொழிற்சங்கங்களிலிருந்தும் அவர்கள் தள்ளப்பட்டார்கள். அதே சமயம் மீண்டும் தேசியவாதிகள் புத்துயிர் பெற்றனர்.

### கட்சிகள்

தத்துவரீதியில் ஈராக்கிலுள்ள சகல கட்சிகளுமே பலவீனமானவை.

பிற்போக்குவாதிகள் கூட தங்களை சோஷலிஸ்டுகள் என்றே கூறிக்கொள்கின்றனர். இவைகளை பல குழுவினராகப் பிரிக்கலாம்.

குர்-ஆன் அடிப்படையில் சட்டத்தை நிலைநாட்ட வற்புறுத்தும் மதக்கட்சிகள்.

அப்துல்நாயருடன் அதிகத் தொடர்பு கொள்ளும்படி வற்புறுத்தும் பல்வேறு வகையான தேசியவாதிகள்.

இடதுமத்திமத்தைச் சேர்ந்த சட்ட ரீதியான ஜனநாயகக் கட்சிகள், கம்யூனிஸ்டுகள் போன்றோர்.


இரு இஸ்லாமியக் கட்சிகள் தீவிர வலதுசாரி நோக்கம் கொண்டவை.

அயல் நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை அராபியநாடுகளுக்கும், அவைகளின் ஐக்கியத்திற்குமிடையே நிலவியரும் சச்சரவு ஒழிக்கப்படவேண்டுமென முஸ்லிம் கட்சி வற்புறுத்துகிறது. அராபிய தாயகத்தின் ஒரு பகுதியே ஈராக் என்றும் இஸ்லாமிய அடிப்படையில் அது இணைக்கப் படவேண்டும் என்றும் அது வற்புறுத்துகிறது. அப்துல் நாயரின் அகண்ட இஸ்லாமியம் இன்னும் ஈராக்கில் மடியவில்லை. பலாத்காரம் மூலமே பலஸ்தீனப் பிரச்னை தீர்க்கப் படவேண்டும் எனவும் முஸ்லிம் கட்சி கூறுகிறது.

ஆயினும் மத அடிப்படையில் இயங்கும் சட்டரீதியானகட்சித் தலைவர்கள் ஜெனரல் காசிமின் சர்வாதிகாரத்தை எதிர்ப்பவர்கள் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். எதிர்கால ஈராக்கின் நிலை எப்படி என்பதை இப்போது விளக்குவதற்கில்லை.

## கல்லீரலுக் கடியில் பிளாஸ்டிக் குழாய்

வைத்திய சாஸ்திரத் துறையில் 'பிளாஸ்டிக்' குழாயைக் கல்லீரலுக்கு அடியில் பொருத்திச் சிகிச்சை செய்து பித்த நீர்ப்பையை நன்ருக வேலை செய்யும்படி குணப்படுத்தும் வழியை ஜேர்மன் வைத்திய நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்.




களைப்புற்கள்,
சந்துக் குத்தி, நெல் ஈ ஆகியவற்றையும்
ஏனைய நெற் பூச்சிகளையும் அறவே ஒழிப்பதற்கு

# ஷெல்

ரசாயனப் பொருட்களைப் பாவியுங்கள்

என்றெக்ஸ் 20...(நீராவை வகை)...சந்துக்குத்தி, நெல் ஈ, அறக்கொட்டியான் ஆகியவற்றையும் ஏனைய பூச்சிகளையும் நாசமாக்கும்.
ஷெல் டீல்றின் 1% தூள்...................... நெல் சப்பூச்சிகளை நாசமாக்கும்.
ஷெல் களைப்புத் கொல்லி "M"......களைப்புல்லை அழிக்கும் (சந்தனக்கோரை, சிறு கோரை, மும்முட்டுக்கோரை, ஒடசி, நீர்முள்ள, புளியாரி.)

கீழ்க்கண்ட சகவிநியோகஸ்தர்களிடமிருந்து கிடைக்கும்:

| | |
|---|---|
| அக்கரைப்பற்று | — மணண்குளம் தோட்டமும் பண்ணையும். |
| அம்பாறை | — கல்லோயா டிரேடர்ஸ். |
| உயிலங்குளம் | — முகம்மது பிரதர்ஸ் |
| ஊர்காவற்றுறை | — ஊர்காவற்றுறை டிஸ்டிரிபியூட்டர்ஸ். |
| ஓமந்தை | — யோகா ஸ்டோர்ஸ். |
| கந்தப்பளை | — குஞ்சை ஸ்டோர்ஸ். |
| கந்தப்பளை | — மோகன் ஸ்டோர்ஸ். |
| கல்முனை | — திரு. எம். எம். முகம்மது அலி. |
| காரதீவு | — திரு. எம். எம். முகம்மது அலி. |
| கிளிநொச்சி | — தென் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க யூனியன் லிமிட்டெட் |
| சம்மாந்துறை | — லக்கி ஸ்டோர்ஸ், 49, பஸார் வீதி. |
| செங்கலடி | — செங்கலடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் லிமிட்டெட். |
| செட்டிகுளம் | — சாலிஹு அண்ட் ஸன்ஸ். |
| நிந்தாவூர் | — திரு. எம். எம். முகம்மது அலி. |
| நுாரளை | — திரு. எஸ். ஏ. பெர்னாண்டோ. |
| நுாரளை | — திரு. ஜே. ஏ. லேன். |
| நுாரளை | — கே. எம். பெர்னாண்டோ அண் கம்பனி. |
| பொத்துவில் | — திரு. எம். கனகரத்தினம். |
| மட்டக்களப்பு | — எஸ். ஏ. செல்வநாயகம் அண்ட் சன்ஸ். |
| யாழ்ப்பாணம் | — வடமாகாண விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு யூனியன் லிமிட்டெட். |
| யாழ்ப்பாணம் | — மஹாதேவா கம்பனி. |
| வவுனியா | — சிவசக்தி ஸ்டோர்ஸ். |
| கிளிநொச்சி | — சாமுவேல் சன்ஸ் & கோ லிமிட்டெட். |
| யாழ்ப்பாணம் | — ஓட்டோஸ் லிமிட்டெட். |
| முல்லைத்திவு | — எஸ். பி. பீற்றர்ஸ் |

கொழும்பு, மக்கலம் வீதி, 109-ம் இலக்கத்திலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன உணவுப் பொருட் பிரிவிலும், பின்வரும் கிளை டிப்போக்களிலும் கிடைக்கும்.

யாழ்ப்பாணம் — மட்டக்களப்பு

கீழ்க்கண்ட ஷெல் நிரப்பும் நிலையங்களிலும் மற்றும் அநேக ஷெல் நிரப்பும் நிலையங்களிலும் பெறலாம்.

| | | |
|---|---|---|
| அம்பாறை, | பண்டாரவளை, | முல்லைத்தீவு, |
| கந்தளாய், | மட்டக்களப்பு, | யாழ்ப்பாணம், |
| கல்முனை, | மடுவீதி, | வவுனியா, |
| களுவாஞ்சிக்குடி, | மன்னார், | வாழைச்சேனை, |
| சாவகச்சேரி, | மாங்குளம், | வெலிமடை, |
| திருகோணமலை, | முருங்கன், | நகலை. |

பெரும்பாலான கூட்டுறவு விவசாய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள்/பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிலும் கூட இவற்றைப் பெறலாம்.

கொழும்பில் கிடைக்குமிடம்:
ஈ. டப்ளியூ. ஏ. ஏஜன்சீஸ்,
25, கபூர் கட்டிடங்கள், மெயின் வீதி,
கோட்டை.

மேற்கொண்டு விபரங்களுக்கு தயவுசெய்து விண்ணப்பிக்கவும்:—
இலங்கை ஷெல் கம்பனி லிமிட்டெட்,
தபால் பெட்டி 280, கொழும்பு-1.
SHELL

# நகர சபையில் ஒரே நாற்றம்!

— நமது சபை நிருபர் —

நகரவீதிகளில் குப்பைகூழங்கள் நாற்றமெடுக்கிறதென்ருல் நகர சபையிலும் நாற்றமெடுக்கவா வேண்டும்? நகரசபையில் நாற்றமடிக்கவில்லை. நகர சபை அங்கத்தவர்கள்தான் நாறல் மீனைப்பற்றிப் பேசித் தள்ளினர்கள். மீன் நிறுத்து விற்கப்படவேண்டும் என்று சபையில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தை எப்படி நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்பது பற்றி நேற்று மாலை மாநகரசபையின் யாதாந்தக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் ஆலோசித்தார்கள்.

மீன் நிறுத்து விற்பதால் யாருக்கு இலாபம் யாருக்கு நஷ்டம்? என்று சில அங்கத்தவர்கள் இலாப நட்டக் கணக்குப் பார்த்துக்கொண்டு பேசியபோது திறமான மீன் மலிவாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக நிறுவை முறை வேண்டும் என்று நல்லூர் துரைராஜசிங்கம் கூறினர். மீன் வாங்க விரும்புவோர் மலிவாக இருந்தால் வாங்குவார் நிறுத்து விற்ருலென்ன சும்மா விற்ருலென்ன விருப்பமுள்ளவர் வாங்குவார். என்று அழகையா புடவை விற்பனையை உதாரணமாகக் காட்டி அழகாகப் பேசி முடித்ததும் மலிவாக வாங்க விரும்புவதுதான் நிறுத்து விற்க வேண்டுமென்று கேட்கும் நோக்கம் இல்லை. நாறல் மீன்தான் மலிவாக கிடைக்குமே என்ருர் தேவபாலசிங்கம். அடுத்துப் பேசிய ஜோனும் நாறல் மீன் பற்றிக் குறிப்பிட மறக்கவில்லை. மீன் சாப்பிடாத பஜார் வட்டார இராசரெத்தினமும் மீன் பற்றிப் பேசத் தவறவில்லை.

மாநகரசபைக் கமிஷனரின் இடமாற்றம் பற்றிய எதிர்ப்புத் தீர்மானத்தின் மீது பேசிய டாக்டர் தர்மலிங்கம் மாநகர சபைக்கு ஏன் வந்தோம் என்று தர்ம சங்கடப்படுவதாகத் தலையிலடித்துக் கொள்ளாக்குறையாகச் சொல்லிக் கொண்டார்.

நுளம்புக் கடிக்கு டி. டி. ரி. தெளிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற தீர்மானமும் நுளம்பு காதில்கீதம் பாடுவது போல் அதிக சத்தமில்லாமலே நிறைவேறியது.

மாநகரசபையில் மீன் நாற்றமெடுத்தாலும் துடிப்பு இருக்கத் தான் செய்தது!

நிறுவை முறையுடன் மீன் பிரச்சனை முடிவடைந்து விடாமல் சின்னக்கடை, பெரியகடை மீன்மார்க்கட் குத்தகைக்காறர் பிரச்சினையும் மீண்டும் மீன் பற்றி அங்கத்தவர்களைப் பேச வைத்துவிட்டது.

வெள்ளிக்கிழமை அங்கத்தவர்களுக்கு மீனைப்பற்றிப் பேசுவதிலேயே திருப்தி ஏற்பட்டதோ என்னவோ!

# மொஸ்கோ டெலிவிஷனில் டக்டர் மலலசேகரா

இலங்கையில் இன்னும் பயன் படுத்தப்படாத இயற்கை வளங்கள் நிறைய இருப்பதாக மாஸ்கோவிலுள்ள இலங்கை ஸ்தானிகர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா தெரிவித்தார். இலங்கை சுதந்திர தினத்தன்று மொஸ்கோவில் டெலிவிஷன் மூலம் பேசிய டக்டர், ரஷ்யா அளித்துள்ள உதவிகொண்டு 16 திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார். டக்டர் மலலசேகரா ரஷ்ய மொழியில் பேசினர்.

# நுளம்புத் தொல்லையை ஒழிக்க டி. டி. ரி. தெளிக்கப்படும்

## மாநகரசபையின் தீர்மானம்

### மீன் நிறுத்துவிற்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் மீன் நிறுத்து விற்கப்படவேண்டுமென்று நகரசபையில் சமீபத்தில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தைத் தொடர்ந்து அத்தீர்மானத்திற்கிணங்க மீன் நிறுத்துவிற்பனை செய்யும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவது சம்பந்தமாக மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டது. மீன் நிறுத்து விற்கும் முறையை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு கொழும்பிலுள்ள மீன்பிடிச் சங்கத்திடம் அனுமதிகோர வேண்டுமென்றும். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா தெரிவித்தார்.

திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில் திறமான மீன் மலிவான விலையில் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காகவே மீன் நிறுத்து விற்கப்படவேண்டுமென மக்கள் கோருகிருர்களென்ருர்.

திரு. எஸ். ஜே. அழகையா பேசுகையில் மீன்நிறுத்து விற்ருலென்ன கூருக விற்ருலென்ன விரும்புவோர் மீன் வாங்கத்தான் செய்வார்களென்ருர்.

திரு. சோ. இராசரத்தினம் பேசுகையில் மீன் நிறுத்துவிற்ருல் வாங்குபவருக்கும் சுகம் விற்பவருக்கும் நன்மையென்ருர். பொதுமக்களின் நஷ்டமும் குறையும் என்று அவர் கூறினர்.

திரு. இராஜசூரியர், திரு. ஜேக்கப், திரு. தேவபாலசுந்தரம் ஆகியோரும் இது பற்றிப் பேசியபின் மீன் நிறுத்து விற்பது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் எடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

**நுளம்புத்தொல்லைக்கு டி. டி. ரி.**

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் பின் யாழ்ப்பாணப் பகுதியில் நுளம்புத் தொல்லை அதிகமென்றும் இதை ஒழித்துக்கட்ட மாநகரசபை மூலம் உடனடியாக நகரிலுள்ள வசிப்பிடங்களில் டி. டி. ரி. தெளிக்க ஒழுங்கு செய்யவேண்டுமென்றும் திரு. சோ. இராசரத்தினம் ஒரு பிரேரணை கொண்டு வந்தார்.

பிரேரணை விவாதிக்கப்படாமலே நிறைவேறியது,

# சிறிமா ரஷ்யா செல்லமாட்டார்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரத்கம, குருணைகலை ஆகிய இரு தொகுதிகளிலும் நடக்கவிருக்கும் இடைத் தேர்தல்களில் போட்டியிடும் தமது கட்சி அங்கத்தவர்களுக்கு ஆதரவு தேடும் நோக்கத்துடன் பிரதமர் தமது வெளிநாட்டுப் பிரயாணத் திட்டத்தை ஒத்திவைத்துவிட்டு உள்நாட்டிலேயே இருக்க விரும்புவதாகத் தெரிகிறது. காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் பிரதம மந்திரி நேராக இலங்கைக்குத் திரும்பிவிடுவார் என்று தெரிகிறது.

பிரதம மந்திரியுடன் லண்டன் செல்லவிருக்கும் நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா லண்டனிலேயே தங்கி அங்கு நடக்கவிருக்கும் நிதிமந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்வார். பிரதமருடன் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். எப். டி. எஸ். ஜயரத்ன, பிரதமரின் அந்தரங்கக் காரியதரிசி டாக்டர் எம். ரத்வத்தை ஆகியவர்களும் லண்டன் செல்லவிருக்கின்றனர்.

பிரதமர் கெய்ரோ மார்க்கமாக லண்டன் செல்லவிருப்பதால் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு விஜயம் செய்வாரா இல்லையா என்பதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்று தெரிகிறது.

# தேமிஸ், இலங்கரத்னவுக்கு பென்ஷன் உரிமை

கொழும்பு

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்ட தற்போதைய உணவு வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தினவுக்கும் முன்னள் கொழும்பு மத்திய தொகுதி மூன்ருவது எம். பி. திரு. எம். எஸ். தேமிசுக்கும் பென்சன் உரிமை வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று தெரிகிறது.

தொழிற்சங்க நடவடிக்கைக்காக அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்ட திரு. ஏ. ஆர். ஆசீர்வாதத்திற்கு சேவைக்கால உபகாரப் பணம் மட்டும் வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

திரு. ரி. பி. இலங்கரத்தின, எம். எஸ். தேமிஸ் ஆகியோருக்கு பென்ஷனே, உபகாரப் பணமோ வழங்கக்கூடாதென அட்டர்ணி ஜெனரல் முன்பே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## பௌர்ணமி தினங்கள் விடுமுறை?

கொழும்பு

பௌர்ணமி தினங்கள் யாவும் அரசாங்க, வர்த்தக விடுமுறைகளாக்கப்படவேண்டுமென அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கேட்டுள்ளது.

## முகாமையாளருக்குப் பாராட்டு

பருத்தித்துறை

தேவரையாளி இந்துக் கல்லூரி முகாமையாளர் கடந்த 35 ஆண்டுகளாக முகாமைக்காரராயிருந்ததையொட்டி அவருக்கு ஒருவிழாக்கொண்டாடப்பட்டது.

அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா முகாமைக்காரரான திரு. எம். சின்னத்தம்பிக்குப் பொன்னுடை போர்த்தினர்.

மாவட்ட நீதிபதிகள் திரு. ஏ. சிவஞானசுந்தரம், திரு. சீ. தனபாலசிங்கம் திரு. எம். சிவசிதம்பரம் எம். பி. ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## கொழும்பு செட்டியார் வர்த்தக சங்கம்

கொழும்பு செட்டியார் வர்த்தக சங்கத்தின் வருடாந்தக் கூட்டம்ஞாயிற்றுக்கிழமைகாலை வெள்ளவத்தை புதுக் கதிரேசன் கோவில் மண்டபத்தில் ராம. பழனியப்ப செட்டியார் தலைமையில் கூடியது. சங்க விஷயங்களைப் பற்றி பேசிய பின் புது வருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

# கொள்ளை லாபம் அடித்தால் கடும் நடவடிக்கை

## வர்த்தகர்களுக்கு நிதி மந்திரி விடுத்திருக்கும் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 12

அரசாங்கம் புதிதாக விதித்திருக்கும் வரிவிகிதங்களால் பாதிக்கப்படாத பொருட்களின் விலைகளைக் கூட்டுவதின் மூலம் பொருள் நெருக்கடி ஏற்படுத்த முனைபவர்கள்மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எச்சரிக்கை விடுத்திருக்கிருர்.

அபிவிருத்தித்திட்ட சபைக் காரியாலயக் கட்டிடத்தில் நேற்று நடைபெற்ற வர்த்தகர்கள் கூட்டமொன்றில் நிதிமந்திரி பேசுகையிலேயே மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார். அவர் அக்கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"அநேக வர்த்தகர்கள் குறிப்பாக ஜவுளி வர்த்தகர்கள் பழைய கையிருப்புக்களைப் புதிய வரிவிகிதத்தில் விற்பனை செய்வதாக நான் அறிகிறேன். உள்நாட்டில் உற்பதியாகும் ஜவுளிகளை புதிய வரிகள் பாதிக்காவிட்டாலும் நிலைமை மோசமாகித்தான் வருகிறது. தேசிய நலனை மனதில்வைத்துத்தான் புதிய வரி விதிக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் பொருட்களின்மீது தடையேதும் விதிக்கப்படவில்லை."

மேற்படி கூட்டத்தில் வர்த்தக மந்திரி, இறக்குமதிக் கட்டுப்பாட்டதிகாரி, சுங்கப்பகுதி அதிகாரிகள் உட்பட வேறு பலரும் கலந்துகொண்டனர்.

# சோவியத் அதிபர் சென்ற விமானத்தை பிரான்ஸ் சுட்டது

## பிரஞ்சு மந்திரி வருத்தம்; விசாரணை நடைபெறும்

சோவியத் ஜனதிபதி பிரஸ்னேவும் அவரது கோஷ்டியினரும் மொரோக்கோவுக்குச் சென்று கொண்டிருந்த விமானத்தை அல்ஜீயர்சுக்கு வடக்கில் 90மைல் தூரத்தில் பிரஞ்சு ஜெட் விமானம் ஒன்று இரண்டு தடவை சுட்டும் எவ்வித ஆபத்துமின்றி ரபாத் போய்ச் சேர்ந்தது.

இச்சம்பவம் குறித்து சோவியத் வெளிவிவகார மந்திரி பிரான்சுக்கு கடும் ஆட்சேபக் குறிப்பொன்றைத் தாக்கல் செய்தார்.

ஜெட் விமானச் சூட்டுச் சம்பவம்பற்றி விசாரணை நடத்துவதாகவும் இது குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தும் பிரான்ஸ் வெளிவிவகார மந்திரி ரஷ்யாவுக்குத் தெரிவித்துள்ளார்

பிரான்ஸ் பத்திரிகைகள் யாவும் இச்சம்பவத்தை வருந்தத் தக்க தவருன செயல் என்று குறிப்பிட்டன.

## பருத்தித்துறையில் சிங்கள வகுப்பு

தும்பளைப் பகுதியில் சிங்களம் படிக்க விரும்புவோருக்கென ஒரு வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகிறது.

## நெல்லியடியில் பொலிஸ் காவல்

நெல்லியடிச் சந்திக்கருகாமையில் மோட்டார் வாகனங்கள் நிறுத்துவது சட்டவிரோதமானது என்றும், அவ்வாறு நிறுத்துவோரின் மீது பருத்தித்துறைப் பொலிஸ் கடுமையான நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிகிறது. இதனல் வான்காரர் அதிகம் பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது. கட்டைவேலிக் கிராமசங்கம் பிறப்பித்த ஒரு கட்டளையின் காரணமாகவே இந்நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.


## குறைந்த விலையில்

ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிறந்த

# முட்டைகள்

மொத்தமாக எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

K. பரமானந்தன்
76, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
EELA NADU

## கண்களைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிசைந்தான். இதலுலேயே அவ்விரவு சிவனிரவு என அழைக்கப்படுவதாய் வரலாறு கூறுகிறது. இன்னும் பல வரலாறுகளும் இதற்குண்டு.

இவ்விரதத்தைச் சூரியன், முருகன், மன்மதன், இயமன் இந்திரன், சந்திரன், அக்கினி, குபேரன் முதலானவர் கூட அனுஷ்டித்து வரங்கள் பெற்றதாக வரலாறுகள் உள்ளன. பாரதத்தின் எல்லாப் பகுதிகளிலும் இது மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. நேபாளத்திலுள்ள பசுபதிநாதர் என்னும் சிவஸ்தலத்தில் கொண்டாடப்படுவதுபோன்று விசேஷம் வேறெங்குமே காண்பதரிது. திருக்கார்த்திகைக்கு திருவெண்ணுமலை எவ்விதம் சிறந்ததோ, அவ்வண்ணமே சிவராத்திரி தினத்திற்கு இன்றும் நேபாள பசுபதிநாதம் சிறப்புடையது.

இவ்விரவில் வடநாட்டின் பல பகுதிகளிலும், கிராமங்களிலும் சிவபெருமானுடைய திருவிளையாடல்களை நாடகரூபமாக நடித்தும் கதாப்பிரசங்கங்கள் செய்தும் நற்பொழுதாகக் கழிப்பர்.

இத்தினத்தில் விழித்திருந்து நான்கு ஜாமப் பூஜைகளையும் சிவபக்தர்கள் முறையாகச் செய்வர். பூஜை தவிர்ந்த இடைவேளைகளில் தியானம் செய்தல் சாலச் சிறந்தது. தியானம், மௌனம், சிவநாம பஜனை, சிவதோத்திரம், செய்தல், சிவகதை கேட்டல், சிவத்தொண்டு, சிவனடியார் தொண்டு, ஜீவத்தொண்டுகள் முறையே அவரவர் மனபரிபாகத்துக்குகந்தவற்றைச் செய்யலாம். **கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே. விண்ணுக்கொரு மருந்தை, வேத விழுப்பொருளை வேண்டுங்கள். விழித்திருந்தும் உள்ளக் கருத்தினை இழக்காமல் இடையருத் தியானம் செய்யுங்கள். அஞ்ஞான இருள் சூழ்ந்த இப்பிரபஞ்சத்தில் என்றும் விழிப்பாக இருந்து மெஞ்ஞான விளக்கினை ஏற்ற வேண்டும்' ஆதி - அந்தமில்லா அருட் பெருஞ் சோதியை அடையச்** **சைவசாதனைகள் பல உண்டு.** எம்கோவில்களில் காட்டப்படும் லட்சதீபம், தீபாவளிப் பண்டிகை, கார்த்திகைத்தீபம் முதலியன இத்தத்துவார்த்தத்தையே உபதேசிக்கும்.

**மனமானதுஇந்திரியவயப்பட்டு மயங்காது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும், சுருக்கியேனும், மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றிணுலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலே விரதமாகும்.**

— "சிவதொண்டன்"

## கட்சி ஏன்?
### சம்பத் விளக்கம்

'கட்சி சுகமாக வாழ்வதற்கு அல்ல. போராட்டங்கள் நடத்த வேண்டும்' என்று தி. மு. கழக பிரமுகர் ஈ. வெ. க. சம்பத ஒரு கூட்டத்தில் கூறினர்.

"நாளைக்கு என்னநடக்கும் என்று சொல்ல முடியாது. போராட்டம் ஆரம்பம் ஆகலாம் எந்த நிமிடத்திலும் போராட்டத்தில் குதிக்க எல்லோரும் தயாராக இருக்க வேண்டும்". என்று திரு. சம்பத் தெரிவித்தார்.

"திரு. ம. பொ. சிவஞானம் நடத்தும்போராட்டம் தோல்வி அடைந்தால் பெரும்படை புறப்பட்டு வரும்." என்று திரு. சம்பத் கூறினர்.

## 'தமிழ்நாடு' போராட்டம் தொடர்ந்து நடக்கும்

'தமிழ்நாடு' பெயர் போராட்டம் தொடர்ந்து நடைபெறும். என்று தமிழரசுக் கழகத் தலைவர் திரு ம. பொ சிவஞான கிராமணியார் அறிவித்துள்ளார்

'தமிழ்நாடு' பெயர் போராட்டத்தை நிறுத்தும்படி நிதிமந்திரி சுப்பிரமணியம் விடுத்திருந்த வேண்டுகோளை திரு. ம. பொ. சி. ஏற்றுக்கொள்ளவில்லை.

## ஐயாறன்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளே சென்றேன். என்ன சுத்தம்! எவ்வளவு ஒழுங்கு! நந்தவனம் ரமணியமாகவுள்ளது. படிக்கட்டு ஏறி மேலே தியான மண்டபத்துக்கு சென்னையிலிருந்து வந்த ஒரு பிரமுகரையும் அழைத்துச் சென்றேன். மின்சார விளக்குகளைப் போட்டதும், அவர் "ஓ! இவ்வளவு நல்ல இடமா!" என்று வாய்விட்டுச் சொல்லி ஆச்சரியப்பட்டார்.

அந்த இடத்துக்குச் சென்ருலே, எவ்வளவு மாசுள்ள மனமும் தூய்மைப்படும். நிம்மதியாக தியானம் செய்ய ஒப்பற்றதோர் இடமாகும். கீழே பெரிய மண்டபம். தங்குவதற்கு அறைகள், சமையலறை, புத்தகசாலை முதலியன கச்சிதமாக அமைக்கப்பட்டுள்ளன. நவநாகரிகமான இக்காலத்திலும், தவவாழ்க்கை வாழ விரும்புபவர்களுக்கு நல்லதோர் இடமாகும் இது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாண நகரிலேஉனக்கு மிகவும் பிடித்தமான இடம் எது? என்று யாராவது என்னைக் கேட்டால், "சிவதொண்டன் நிலையம் தான்" என்று தயங்காமல் சொல்லிவிடுவேன். யாழ்ப்பாணத்துக்கே புனிதமளிக்கும் இந்தத் தவச்சாலை ஒரு சில வருடங்களுக்குமுன் தான் கட்டப்பெற்றதாகும். முன் ஒருமுறையாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பெரியவரைப்பற்றி எழுதினேனல்லவா? அவரது உள்ளத்தில் எழுந்த ஓர் எண்ணத்தின் பலனே இந்த அருமையான ஆசிரமம். இதில் பெரிய விசேஷமென்ன தெரியுமா? அந்தப் பெரியவர், அந்த ஆசிரமத்துக்குள் இதுவரை சென்றதில்லையாம்! வெளிவாசலுக்கு முன்புதான் நிற்பாராம்!

ஏன் உள்ளே வரக்கூடாதென்று கேட்டதற்கு, "அங்கு வர எனக்கேது தகுதி?" என்று சொல்லுவாராம் அவர்! கருத்தென்ன? அங்கு அடிவைக்க நம்மை நாம் எவ்வளவு பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும்!

வாழ்க சிவதொண்டன் நிலையம்!

ஃ ஃ ஃ

## கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் சஞ்சிவரெட்டிக்கு நபல்பூரில் ஜனசங்கக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கறுப்புக்கொடி காட்டி ஆர்பாட்டம் செய்தனர்.

—

## சிவாஜிக்கு காய்ச்சல்

சினிமா நடிகர் சிவாஜிகணேசனுக்குக் கடுமையான காய்ச்சல். படுக்கையிலிருக்கிருர். டாக்டர்கள் அடிக்கடி கவனித்து வருகின்றனர். 'கப்பலோட்டிய தமிழன்' படப்பிடிப்புக்காக பம்பாய்க்குச் சென்றிருந்த சிவாஜிகணேசன் காய்ச்சலுடன் ஊர் திரும்பினர்.

—

## கோலார் தங்கச்சுரங்கம் மூடப்படமாட்டாது

கோலார் தங்கச்சுரங்கம் மூடப்படமாட்டாது என்று மைசூர் சட்ட, தொழிலாளர் மந்திரி திரு. டி. சுப்பிரமணியம் உறுதியளித்தார். "இச்சுரங்கத்தில் இதுவரை பொதுவாக சிறந்த முறையில் வேலை நடைபெற்று வருகிறது. மற்றும் இதில் தங்கம் கிடைத்துவருவதும் அதிகரித்துக் கொண்டே வருகிறது" என்று திரு. சுப்பிரமணியம் கூறினர்.

"விறகில் தீயினன் பாலில்
படு நெய் போல்
மறைய நின்றுளன்
மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு
கயிற்றினல்
முறுகவாங்கிக் கடைய
முன்னிற்குமே"

—திருநாவுக்கரசர்.

மகத்தான 4-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)


ஸ்ரீ கிருஷ்ணு (திருக்கோணமலை) லட்சுமி (ரத்தினபுரி) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா) தீவொளி (நுவரெலியா) நியூ சினிமா (குருநாகல்) ஜெமினி (ராகலை)

★ அனைத்தும் ஆண்டவன் கைராசி.
★ அன்பும் அறனும் உடையவராவது அவரவர் ஆற்றலின் கைராசி.
★ உலகம் வாழ உதவி புரிவது கலப்பை பிடிப்பவன் கைராசி.
★ பலவித செல்வமும் ஒருங்கே அமைவது பானை பிடிப்பவள் கைராசி.
★ மனத்துயர் யாவும் பனிபோல மறைவது மழலைச் செல்வங்கள் முகராசி.
★ பாரினில் மக்கள் பண்புடன் வாழ்வது வான்புகழ் வள்ளுவன் குறள்ராசி,

முகராசியுள்ள ஜெமினி கணேசன் - பி. சரோஜாதேவி மற்றும்



★ சகஸ்ரநாமம்
★ எம். வி. ராஜம்மா
★ எம். ஆர். ராதா
★ கே. மாலதி
★ தங்கவேலு
மோகனு
கே. டி. சந்தானம்
நடித்த



டைரக்ஷன்:
கே. சங்கர்

இசை அமைப்பு:
ஆர். கோவர்த்தனம்

வாசு பிலிம்ஸ்

கைராசி

பின்னணி:
சௌந்தரராஜன்
சீர்காழி
கோவிந்தராஜன்
எஸ், ஸி, கிருஷ்ணன்
பி. சுசீலா
பகவதி
ராஜேஸ்வரி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ளஅவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.